**அரை ஆண்டுக்கு முந்தைய தேர்வு- 2023-24**

**QUESTION NO-2**

**வகுப்பு: 12 பாடம்: பொருளியல் மதிப்பெண்கள் : 90**

**பகுதி – I**

**குறிப்பு : i) அனைத்து** வினாக்களுக்கும் விடை அளிக்கவும்.

ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்துஎழுதவும்.

1. . " மேக்ரே " (Macro) என்ற வார்த்தையை அறிமுகப்படுத்தியவர் யார்?
அ. ஆடம்ஸ்மித் ஆ. ஜே .எம். கீன்ஸ்
இ. ராக்னர் பிரிக்ஸ் ஈ. காரல் மார்க்ஸ்

2. திறந்து விடப்பட்ட பொருளதாரத்தின் வட்ட ஓட்ட மாதிரி என்பது ___ஆகும்
அ. இரு துறை மாதிரி ஆ. முத்துறை மாதிரி
இ. நான் கு துறை மாதிரி ஈ. மேல் சொல்லப்பட்ட அனைத்தும்.

3. எத்தனை முறைகளால் தேசிய வருவாய் கணக்கிடப்படுகிறது?
அ. இரண்டு ஆ. மூன்று இ. ஐந்து ஈ. நான்கு

4. பணவீக்கத்திற்கு சரிபடுத்தப்பட்ட தேசிய வருவாயின் மதிப்பு ____என அழைக்கப்படுகிறது
அ. பணவீக்க வீதம் ஆ. செலவிடக் கூடிய வருமானம்
இ. GNP ஈ. உண்மைத் தேசிய வருவாய்.

5. சேமிப்புக்கும் முதலீட்டுக்கும் இடையே சம நிலையை கொண்டு வருவது நெகிழ்வு ஆகும்.
அ. தேவையின் ஆ. அளிப்பின் இ. மூலதனத்தின் ஈ. வட்டியின்

6. சரசாரி நுகர்வு நாட்டம் கணக்கிடப்படுவது
அ) C/Y ஆ) C Y இ) Y/C ஈ) C+Y

7. MPC = 0.5 எனில், பெருக்கியின் மதிப்பு
அ) 2 ஆ) 1/2 இ) 0.2 ஈ) 20

8. பணம் என்பது
அ) உள்ளடக்க மதிப்பு இருந்தால் ஏற்றுக்கொள்ளளப்படுவது.
ஆ) நிலை யான வாங்கும் சக்தியை கொண்டது
இ) உள்ளவற்றில் அதிக நீர்மைத்தன்மை கொண்ட சொத்து ஆகும்.
ஈ) வளங்களை பங்கிட்டுக்கொள்ள தேவைப்படுகிறது.

9. கடன் உருவாக்கம் என்பதன் பொருள்
அ) கடன் மற்றும் முன்பண பெருக்கம் ஆ) வருவாய்
இ) செலவு ஈ) சேமிப்பு.

10. நிகழ்நிலை வங்கியகம் என்பது எவ்வாறு அழைக்கப்படுகிறது?
அ) இ-வங்கி ஆ) இணைய வங்கி இ) ஆர்.டி.ஜி.எஸ் ஈ) நெப்ட்.

11. அயல்நாட்டுச் செலுத்துநிலை உள்ளடக்கிய இனங்கள்
அ. புலனாகும் பொருட்கள் மட்டும் ஆ. புலனாகாத பணிகள் மட்டும்
இ. அ மற்றும் ஆ ஈ. பண்ட வாணிபம் மட்டும்.

12. பன்னாட்டு பண நிதியத்தின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள இடம்
அ) வாஷிடங்டன் டி.சி ஆ) நியூ யார்க் இ) வியன்னா ஈ) ஜெனிவா

13. ஆசியான் விவாதத்தில் பங்கெடுக்கும் ஆறு நாடுகளில் சேராத நாடு
அ) சீனா ஆ) ஜப்பான் இ) இந்தியா ஈ) வடகொரியா.

14. கீழே உள்ள வாக்கியங்களைக் கருத்தில் கொண்டு, சரியான ஒன்றை அடையாளம் காண்க .
i. மாநில பட்டியலிலோ , இணைப்பு பட்டியலிலோ குறிப்பிடப்படாத வரியை விதிப்பதற்கு மைய அரசுக்கு தனி உரிமையில்லை
ii. அரசியலமைப்பு சில வரிகளை மைய அரசு பட்டியலில் இருந்து மாநில அரசு பட்டியலுக்கு மாற்ற வசதி செய்கிறது
அ) i மட்டும் ஆ) i i மட்டும் இ) இரண்டும் ஈ) ஏதுமில்லை.

15. வருவாய் செலவு (Revenue Expenditure) வருவாய் வருவாயை விட (Revenuereceipts) அதிகமாக இருந்தால் , அது
அ) வருவாய் பற்றாக்குறை ஆ) நிதிப்பற்றாக்குறை
இ) வரவு செலவு பற்றாக்குறை ஈ) அடிப்படைப் பற்றாக்குறை

16. சுற்றுச் சூழல் பொருளியலின் அடிப்படை கருத்துக்களில் ஒன்றும், சந்தை தோல்விக்கு காரணமானதும் --------ஆகும்.
அ) நேர்மறைபுற விளைவுகள் ஆ) எதிர்மறைபுற விளைவுகள்
இ) இரண்டும் ஈ) மேற்சொன்னஎதுவுமல்ல.

17. மின்னணு கழிவுகளுகள் ------------ என்ற பொ துவாக குறிப்பிட்படுகின்றன .
அ) திடக் கழிவுகள் ஆ) குப்பைக் கழிவுகள்
இ) இ-கழிவுகள் ஈ) மருத்துவம னைக் கழிவுகள்.

18. கீழ்கண்ட வற்றுள் எந்த பொருளாதாரம் சாராத காரணி, பொருளாதார முன்னேற்றத்தை நிர்ணயிக்கிறது
அ) இயற்கை வளங்கள் ஆ) மனிதவளங்கள்.
இ) மூலதன உருவாக்கம் ஈ) பன்னாட்டு வாணிபம்.

19. சுட்டிக்காட்டும் திட்டமிடலை செயல்படுத்திய நாடு
அ) பிரான்சு ஆ) ஜெர்மனி இ) இத்தாலி ஈ) ரஷ்யா

20. Y = 2 - 0.2X எனில், Y அச்சு வெட்டு ---- ஆகும்.
அ) - 2 ஆ) 2 இ) 0.2X ஈ) மேற்சொன்ன அனைத்தும்

## பகுதி – II

**குறிப்பு** : ஏதேனும் **7** வினாக்களுக்கு விடையளிக்கவும்.
**வினா எண் 30**க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.

21. பேரியல் பொருளியலின் இலக்கணம் தருக.
22. தனிநபர் வருமானம் என்றால் என்ன?
23. சே விதியின் எடுகாள்களை பட்டியலிடுக.
24. சராசரி நுகர்வு நாட்டம் (APC) - வரையறு.
25. பண்டமாற்று என்றால் என்ன ?
26. CRR மற்றும் SLR ஆகியவற்றினை வேறுபடுத்துக.
27. ஐபிஆர்டியின் ஏதேனும் இரண்டு கடன் திட்டங்களின் பெயர்களை சுட்டிக்காட்டுக
28. "பொது நிதி " வரையறு.
29. சூழலியல் என்றால் என்ன ?
30. உடன் தொடர்பு என்பதனை வரையறு.

## பகுதி – III

**குறிப்பு** : ஏதேனும் **7** வினாக்களுக்கு விடையளிக்கவும்.
**வினா எண் 40**க்கு கட்டாயமாக விடையளிக்கவும்

31. கலப்புப் பொருளாதாரத்தின் முக்கிய இயல்புகளை எடுத்தெழுதுக.
32. செலவு முறைபற்றி ஒரு சிறு குறிப்பு தருக
33. J.B. சே விதியில் விளைவுகளைப்பற்றி குறிப்பு வரைக
34. உலோகப் பணம் பற்றி ஒரு குறிப்பு வரைக .
35. பன்னாட்டு வாணிகத் தொன்மைக் கோட்பாட்டிற்கும் புதிய கோட்பாட்டிற்குமிடையிலான வேறுபாடுகளை எழுது.
36. முதன்மைப் பற்றாக்குறை என்றால் என்ன ?
37. நீர்மாசுக்கான காரணங்கள் யாவை ?
38. செயல்பாட்டுத் திட்டமிடலுக்கும் அமைப்புமுறைத் திட்டமிடலுக்கு மிடையேயான வேறுபாடுகள எழுதுக
39. பொருளாதார அளவையியலின் நோக்கங்களை கூறுக.
40. ஆசியான் அமைப்பின் சாதனைகளைப் பட்டியலிடுக.

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்கவும்.**

41. **அ)** முதலாளித்துவ, சமத்துவம், கலப்புத்துவம் இவற்றின் தன்மைகளை ஒப்பிடுக.

**அல்லது**

41. **ஆ)** தேசிய வருவாயைக் கணக்கிடும் முறைகளை விளக்குக.

42. **அ)** ADF மற்றும்ASF க்கு இடையிலான சமநிலையைவரைபடம்மூலம்விவரி**.**

**அல்லது**

42. **ஆ)** கீன்ஸின் நுகர் வுச் சார்பின் உளவியல் விதியினை வரை படம் மூலம் விளக்குக.

43. **அ)** வணிகச் சுழற்ச்சியின் பல்வேறு கட்டங்களை விவரிக்க.

**அல்லது**

43. **ஆ)** இந்திய ரிசர்வ் வங்கியின் பணிகளை விவரிக்க.

44. **அ)** ஒப்புமைச் செலவுக் கோட்பா ட்டினை விவரி.

**அல்லது**

44. **ஆ)** உலக வங்கியின் பணிகளை வெளிக் கொணர்க.

45. **அ)** வரவு செலவுத் திட்டத்தில் உள்ள பல வகை பற்றாக்குறை களை விளக்குக.

**அல்லது**

45. **ஆ)** புறவிளைவுகள் என்ற கருத்தினையும் அதன் வகைப்பாடுகளையும் விளக்குக.

46. **அ)** திட்டமிடலுக்கு எதிரான வாதங்களை எடுத்துரைக்கவும்.

**அல்லது**

46. **ஆ)** பின்வரும் விவரங்களிலிருந்து Y மீது X மற்றும் X மீது Y ஆகியவற்றினை கண்டறிக .

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| Y | 45 | 48 | 50 | 55 | 65 | 70 | 75 | 72 | 80 | 85 |
| X | 25 | 30 | 35 | 30 | 40 | 50 | 45 | 55 | 60 | 65 |

47. **அ)** முடுக்கி இயங்கும் விதத்தினை விவரி.

**அல்லது**

47. **ஆ)** ஜேக்கப் வைன ரால் வடிவமை க்கப்பட்ட வாணிப வீத வகை களை விவரி